# பழனி பாலிடெக்னிக் கல்லூரியில் 'வனம் வளர்ப்பு' விழா

**பழனி, செப். 7:** பழனி அருள்மிகு பழனியாண்டவர் பாலிடெக்னிக் கல்லூரியில் வெள்ளிக்கிழமை வனம் வளர்ப்பு விழா மற்றும் வழிகாட்டுதல் விழா உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

பழனி அருள்மிகு பழனியாண்டவர் பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் நாட்டுநலப்பணித் திட்டம் சார்பில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சிக்கு கல்லூரி செயலர் மற்றும் திருக்கோயில் துணை ஆணையர்(பொறுப்பு) செந்தில்குமார் தலைமை வகித்தார். முதல்வர் கந்தசாமி(பொறுப்பு) முன்னிலை வகித்தார். நெய்க்காரபட்டி அரிமா சங்க ஒருங்கிணைப்பாளர் மயில்சாமி, மாவட்ட தலைவர் சுப்புராஜ், கொடைக்கானல் சன் அரிமா சங்க பட்டயத் தலைவர் ரவீந்திரன் உள்ளிட்டோர் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து மாணவர்களுக்கு எடுத்துரைத்தனர். வளாகத்தில் சுமார் 150 மரக்கன்றுகள் நடப்பட்டன. திட்ட அலுவலர் ராமச்சந்திரன், ராஜலட்சுமி, ராஜேஷ் உள்ளிட்டபலர் விழா ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

தொடர்ந்து கனடா இந்தியா கூட்டுப்பயிலகத் திட்டம் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தொழில்முனைவோர் மேம்பாடு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இயந்திரவியல்துறை தலைவர் பத்மநாபன் வரவேற்புரை வழங்கினார். கோவை இந்தோ மலேசியன் காஸ்டிங் நிறுவன முதன்மை இயக்குநர் இளமாறன் பயிற்சிகள் குறித்து விளக்கினார்.

வழிகாட்டுதல் விழா: கல்லூரி வளாகத்தில் மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறை, தகவல் தொழில்நுட்பத்துறை சார்பில் இறுதியாண்டு பயிலும் மாணவர்களுக்கு ஆளுமைத்திறன் மேம்பாடு மற்றும் வழிகாட்டுதல் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு முதல்வர்(பொறுப்பு) கந்தசாமி தலைமை வகித்தார். துறைத் தலைவர்கள் சுப்ரமணியன், பாலசுப்ரமணியன்(பொறுப்பு) உள்ளிட்டோர் ஏற்பாடுகள் செய்திருந்தனர். சென்னை மைண்ட் டைனமிக்ஸ் இயக்குநர் முத்தையா ராமநாதன் பயிற்சி வழங்கினார்.



பழனி அருள்மிகு பழனியாண்டவர் பாலிடெக்னிக் கல்லூரியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற வனம் வளர்ப்பு விழாவில் மரக்கன்றுகளை நட்ட துணை ஆணையர் (பொறுப்பு) செந்தில்குமார். உடன், முதல்வர் (பொறுப்பு) கந்தசாமி, அரிமா சுப்புராஜ், ரவீந்திரன்.